# தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு


திசம்பர் 2019

திபி 2050 . மலர் 1 . இதழ் 9


நாம் தமிழர் கட்சி

# மாவீரர் நாள் 2019



# பதிப்புரை

## இவ்விதழில்

1. தமிழகத்தின் வளர்ச்சியில் பொதுத்துறை நிறுவனங்கள்
2. மக்கள் களம்

> “எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கின்றது."
>
> - தலைவர் பிரபாகரன்

நம் ஈக மறவர்கள் தன் இன்னுயிரை தமிழரின் விடுதலைக்காகக் கொடுத்த நாள் மாவீரர் நாளாகும். மாவீரர் நாள் துக்க நாள் அல்ல. எழுச்சி நாள்.

தமிழின மீட்பை உயிராகக் உறுதிக் கொள்வதே இந்நாளில் அவர்களுக்கு நாம் அளிக்கும் உண்மையான மரியாதை.

வீரவணக்கம்.

ஆசிரியர் குழு

# தமிழகத்தின் வளர்ச்சியில் பொதுத்துறை நிறுவனங்கள்

- அறிவரன் பா



இந்தியாவில் பொதுத்துறை நிறுவனங்கள் வளர்ச்சியைப் பரவலாக்குவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

ஒரு வளர்ச்சி பெற்ற சம வாய்ப்புகள் நிலவுகிற சந்தைப் பொருளாதார நாட்டில் பொதுத் துறை நிறுவனங்களின் தேவை குறைவு. எனினும், தற்சார்பு பொருளாதாரம் நோக்கி, நாம் யோசிக்கும் வேளையில், தமிழகத் தனியார் துறைகள் வளர்ச்சியடையும் வரையில் தமிழகப் பொதுத் துறை நிறுவனங்களின் பங்கு மிக முக்கியமானது.

**தற்போதைய நிலை**

தமிழக அரசு 67 பொதுத் துறை நிறுவனங்களை இயக்கி வருகிறது. எனினும் பல பொதுத்துறை நிறுவனங்களை ஆரம்பிக்க வேண்டிய நிலை உள்ளது.

**தமிழ் வங்கி**

தமிழக அரசுத் தன் ஊழியர்களுக்கு மட்டும், வருடத்திற்கு சம்பளம் மட்டும் மற்றும் ஓய்வூதியமாக 1,00,000 கோடி ( சம்பளம் - 64,211 கோடி, ஓய்வூதியம் - 35,575 கோடி ) வங்கிகள் வழியாக வழங்கி வருகிறது. இவற்றை புதிய வங்கிக்குத் திருப்பினாலே, வங்கி செழுமை பெறும்.

மேலும் நகைக் கடன், அதிக வட்டி என அல்லலபடும் மக்களைக் காக்க முடியும்.

இதன் மூலம் 10,000 இளைஞர்களுக்கு நேரடியாகவும், 25,000 இளைஞர்களுக்கு மறைமுகமாகாவும் வேலையளிக்க முடியும்.

**தமிழக காப்பீடு நிறுவனம்**

இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம் இந்தியப் பொருளாதாரத்தில் வகிக்கும் பங்கு நாம் யாவரும் அறிந்ததே.

தமிழக அரசு வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளோருக்கான மருத்துவ காப்பீடு, அரசு ஊழியர் மருத்துவ காப்பீடு பங்கு என 2500 கோடி, காப்பீட்டு நிறுவனங்களுக்கு செலுத்தி வருகிறது.

தமிழ் காப்பீடு நிறுவனம் தொடங்குவதன் மூலம் மருத்துவ காப்பீடு, பயிர் காப்பீடு, வாகன காப்பீடு ஆகியவற்றை இதில் செய்வது மூலம், காப்பீட்டுத் தொகையைத் தமிழக அரசின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த முடியும். மக்களுக்கான சேமிப்பாகவும் இது மாறும். இதன் மூலம் 5000 நேரடி வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும்.

**தொலைத் தொடர்பு**

இன்று மிகப்பெரியத் தொழிலாக வளர்ந்திருக்கக்கூடிய தொலைதொடர்புத் துறையில் ஒரு தமிழக நிறுவனமும் பெயரளவில் கூட இல்லை என்பது கொடுமை. பல்லாயிரம் கோடிகள் தமிழகத்திலிருந்து இவற்றின் மூலம் வெளியேறிக் கொண்டிருக்கிறது. இந்தத் தொலைத்தொடர்பு நிறுவனங்களின் வாயிலாக மறைமுகமாக இந்தித் திணிப்பும் நடந்துவருகிறது.

முதலில் தமிழக அரசு, கிராமங்களுக்கும் ஒளி மின்னிழை வழியாக இணைய இணைப்புக் கிடைக்கச் செய்ய வேண்டும். தமிழ்நாடு பைபர்நெட் பெயரளவிலே செயல்பட்டு வருகிறது. எனவே, இதனில் தமிழக அரசு கவனம் செலுத்த வேண்டும். இதன் மூலம் 5000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க முடியும்.

**தகவல் தொழில் நுட்பம்**

பிற மாநிலங்கள் பல்வேறு துறைகளில் தகவல் தொழில் நுட்பத்தைப் பெருமளவில் பயன்படுத்தி வருகின்றன. தமிழகம் இதில் பின்தங்கியே உள்ளது. தகவல் தொழில் நுட்பப் பொதுத்துறை நிறுவனம் அமைத்தால் 25,000 இளைஞர்களுக்கு வேலையளிக்க வேண்டும். வளர்ச்சியைப் பரவலாக்கவும் முடியும்.

**விமான சேவை**

இந்தியாவிலேயே மிக அதிகமாக வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்துக் கொண்டிருக்கும் மாநிலம் தமிழகம். தென் கிழக்கு ஆசிய நாடுகளில் அதிகளவு தமிழர்கள் வாழ்கிறார்கள். எனவே, தமிழக அரசு விமானப் போக்குவரத்தில் கவனம் செலுத்தவது, தமிழகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு அவசியம். 1000 கோடி விதை முதலீடில் ஆரம்பிக்கப்படும் இந்நிறுவனத்தின் மூலம் 5000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க முடியும்.
அவ்வாறே, தமிழக விமான நிலையங்கள் தனியார் மயமாக்கப்படும்போது, தமிழக அரசு அவற்றைப் பெற அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்.

**ரயில் சேவை**

இந்திய அரசு தற்போது, ரயில்வேத் துறையை தனியார் மயமாக்கும் பணியில் முனைப்புக் காட்டிவருகிறது. தமிழக சாலைகளில் விபத்துகளைக் குறைப்பதற்கும், போக்குவரத்தைக் குறைப்பதற்கும் ரயில் சேவை அவசியம். அதிவேக ரயில் போக்குவரத்திலும் கவனம் செலுத்த வேண்டும்.

புதிய பெண்டுலம் தொழில்நுட்பம் பயன்படுத்தும் ரயில்களில், இருக்கும் பழைய கட்டமைப்பைப் பயன்படுத்தியே சென்னையிலிருந்து மதுரை கோவையை 3 மணி நேரத்தில் அடைய முடியும். இந்திய அரசை எதிர்பார்த்துக் கொண்டிராமல், இந்நிறுவனத்தின் மூலம் விரைவாக செயல்படுத்த முடியும். 5000 கோடி முதலீட்டில், 50,000 இளைஞர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பளிக்க முடியும்.

**கப்பல் துறை**

தமிழகம், இந்தியக் கடலில் மிக முக்கியமான இடத்தில், சர்வதேச கப்பல் வர்த்தக பாதையின் அருகில் அமைந்திருக்கிறது. ஆனால், இன்று, தமிழகத்தின் பங்கு இதில் சொற்பம். பூம்புகார் கப்பல் நிறுவனம் சில படகுகளும், இரண்டு கப்பற்கள் வைத்துள்ளதோடு சரி. எனவே, தமிழகம் கப்பல் துறையில் கவனம் செலுத்துவது மிக முக்கியம்.

**வேளாண் பொருட்கள் மதிப்புக்கூட்டு நிறுவனம்**

வேளாண் பொருட்கள் விலை ஏற்ற இறக்கங்களாலும் உற்பத்தி - தேவை வேறுபாடுகளாலும், விவசாயிகளும் நுகர்வோரும் பாதிக்கப்படுகின்றனர். வருடத்தின் சில நாட்களில் விலைச்சல் அதிகரிப்பதின் காரணமாக




தக்காளி, வெங்காயம் விலை உற்பத்தி விலைக்குக் குறைவதும் வருடத்தின் சில நாட்களில் மிக அதிகளவு உயர்வதும் வருடத்திய நிகழ்வு. இதைப் போக்க விளைபொருட்கள் சேமிக்கப்படவும் முறையாக வழங்கப்படவும் வேண்டும்.

**தமிழக வேளாண் பொருட்கள் மதிப்புக்கூட்டு நிறுவனம்**

இந்தப் பணியைச் செய்யும். எடுத்துக்காட்டாக தக்காளி விலை குறையும்போது, அதை சாறாக மாற்றி சேமித்து, தக்காளி விலை ஏறும்போது விற்கும். வேறு விளைபொருட்களையும் மதிப்புக்கூட்டி விற்பனை செய்யும். இதன் மூலம் விவசாயிகளும் மக்களும் பெரும் பயனடைவர்.


மாவீரர்கள்


நவம்பர்
27
2019
மாவீரர் நாள்
விதையாய் விழுந்த
தமிழ் மறவரின் கதையே
எமது வரலாறு !
நாம் தமிழர் கட்சி
பேச: 044 43804084 / 9092617178 / 9600709263 / www.naamtamilar.org